# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8075258

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : வேலூர் மாவட்டம் | PS: V G A C காவல்நிலையம் VELLORE | Year: 2020 ஆண்டு | FIR No.: 21/2020 மு.த.அ. எண் | Date: 16.12.2020 நாள்

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION — Sections பிரிவுகள்: Sec 7 (a)
   (ii) Act சட்டம்: ACT-1988 AS AMENDED BY — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: P.C (AMENDMENT) ACT-2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 10.12.2020 AND 15.12.2020
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.12.2020 | Time : நேரம் 06.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-II | Time : நேரம் 06.30 Hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ELAVAMBADI
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி 15 Kms SOUTH WEST
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. NATARAJAN | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் KANNAN
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 56/20 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் COOLIE | (g) Address : முகவரி NO: 1/12, NEW STREET, ELAVAMBADI VILLAGE, ANAICUT TALUK VELLORE DIST

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt REVATHY, VILLAGE ADMINISTRATIVE OFFICER (V.A.O) ELAVAMBADI VILLAGE, ANAICUT TALUK VELLORE DIST

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — NO DELAY —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPARATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K Natarajan 16/12/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 16/12/20
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.12.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 08.00 HRS

Name: பெயர் M. RAJANIKANTH
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
VIGILANCE AND ANTI CORRUPTION
VELLORE

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 16.12.2020-ஆம் தேதி 06.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.K. நடராஜன் (56/2020) த/பெ கண்ணன் (எ) சின்னகண்ணன், எண்.1/12, புதுத்தெரு, இலவம்பாடி கிராமம், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் K.நடராஜன் த/பெ கண்ணன் (எ) சின்னகண்ணன் எண்.1/12, புதுத்தெரு, இலவம்பாடி கிராமம், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறை, வேலூர், வேலூர் மாவட்டம். அய்யா, நான் M.A., M.Phil., B.Ed., படித்துள்ளேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் அப்பா பெயர் சின்னகண்ணன் (எ) கண்ணன், அம்மா பெயர் குப்பு என் மனைவி பெயர் பரமேஸ்வரி எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். அவர்கள் பெயர் மோனிஷா மற்றும் யுவஸ்ரீ ஆகும். என்னுடைய அப்பா சின்னகண்ணன் அவர்களின் பெயரில் இலவம்பாடி கிராமம் கிராம நத்தம் சர்வே எண்.356/A , 596 சதுர அடியில் மனையும், அதில் ஒரு வீடும் உள்ளது. அந்த சொத்தை என்னுடைய அப்பா என்னுடைய பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக கடந்த 20.3.2013 அன்று பள்ளிகொண்டா சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்தார். அந்த சொத்தின் பட்டா என்னுடைய அப்பா சின்னகண்ணன் (எ) கண்ணன் பெயரிலேயே உள்ளது. அந்த பட்டாவில் என்னுடைய பெயருக்கு மாற்றம் செய்வதற்காக, கடந்த 10.12.2020 ஆம் தேதி பகல் சுமார் 11.30 மணிக்கு இலவம்பாடி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திருமதி.ரேவதி அவர்களை பார்த்து என்னுடைய அப்பா பெயரில் உள்ள பட்டாவை என்னுடைய பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று சொன்னதற்கு அவர் அந்த சொத்து ஆவணத்தையும், பழைய பட்டா நகல் மற்றும் என்னுடைய மனுவையும் எடுத்து வந்து கொடுக்குமாறும் அவ்வாறு வரும்போது அலுவலக செலவிற்காக ரூ.3000/- கொடுத்தால் ஒரு வாரத்தில் பட்டாவில் பெயர் மாற்றம் செய்து கொடுப்பதாக சொன்னார். பிறகு நான் வீட்டிற்கு வந்து எனக்கு தெரிந்தவர்களிடம் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ஆகும் செலவு சம்மந்தமாக விசாரித்தபோது, அவர்கள் அதற்கு பணம் எதுவும் செலவு ஆகாது என்று சொன்னார்கள். நான் மறுபடியும் கிராம நிர்வாக அலுவலரை அவருடைய அலுவலகத்தில் நேற்று 15.12.2020 ஆம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு போய் பார்த்து நான் ஏற்கனவே எழுதி வைத்திருந்த மனுவையும், சொத்து சம்மந்தமான ஆவணத்தையும் கிராம நிர்வாக அலுவலரின் பெயருக்கு முகவரியிட்டு கொடுத்தேன். அதை பார்த்த திருமதி.ரேவதி அவர்கள் வி.ஏ.ஓ.க்கு முகவரியிட்டு

கொடுக்கக்கூடாது, தாசில்தாருக்குதான் முகவரியிட்டு தரவேண்டும் என்றும், அந்த மனுவில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்று சொல்லி திருத்தம் செய்து கொண்டு மனுவை பெற்றுக்கொண்டு, அலுவலக செலவிற்காக நான் கேட்ட பணம் ரூ.3000/- கொடுங்கன்னு கேட்டார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது நான் கூலி வேலைதான் செய்து வருகிறேன் என்று கெஞ்சி கேட்டதற்கு, அவர் சரி 500 ரூபாய் குறைத்துக்கொண்டு 2500 ரூபாய் எடுத்துக் கொண்டு நாளை என்னை வந்து பாருங்க என்று சொன்னார். எனக்கு இலவம்பாடி வி.ஏ.ஓ. திருமதி.ரேவதி அவர்கள் லஞ்சமாக கேட்ட ரூ.2500/- பணத்தை கொடுத்து என்னுடைய பெயருக்கு பட்டாவினை பெயர் மாற்றம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. அதனால் நான் வி.ஏ.ஓ. திருமதி.ரேவதி அவர்கள் கேட்ட லஞ்சப்பணத்தை அவருக்கு கொடுக்கும்போது கையும் களவுமாக பிடித்து, சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய பெயரில் உள்ள சொத்தின் பத்திர நகலை தங்களுக்கு இணைத்து கொடுத்துள்ளேன். இப்படிக்கு ஒம்/- K.Natarajan 16/12/20

Inspector Tr.Rajanikanth to receive the complaint and register a case. Sd/- xxxxxxxxxxx (HEMACHITHRA K.S.) 16/12/2020, DSP, VAC/ VELLORE.

Madam, Received the complaint on 16/12/2020 at 06.30 hrs after verifying the antecedents of the accused and credibility of the complainant at 07.00 hrs, I have registered a case in Vellore V&AC Cr. No.21/2020 u/s. 7(a) of the PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018. Sd/-xxxxx (M.Rajanikanth) Ins/V&AC/Vellore 16/12/20.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and other copies sent to the officers concerned.

16/12/20

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Vellore-1.